# செந்தமிழ்

தொகுதி : 93 ஆகஸ்டு 1999 பகுதி : 8

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் **மா. தனுக்கோடி பாண்டியன்** பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1

ஆசிரியர் பேரறிஞர் **நா. பாலுசாமி**
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்,. பி.எச்.டி.,

# தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| திரு. நா. குமரன் சேதுபதி, | தலைவர் |
| திரு. மா. தனுக்கோடிபாண்டியன் | செயலாளர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் | உறுப்பினர் |
| திரு. கே.எஸ்.டி. இராசேந்திரன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். என். சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஐயா | உறுப்பினர் |
| திரு. அ. தட்சிணாமூர்த்தி | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா. அழகுமலை | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |

# செந்தமிழ் ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பேரறிஞர் | தமிழண்ணல் | மதுரை |
| பேரறிஞர் | செ. கந்தசாமி | முதல்வர் |
| பேரறிஞர் | ம.ரா.போ. குருசாமி | கோயம்புத்தூர் |
| பேரறிஞர் | ச. மெய்யப்பன் | சிதம்பரம் |
| பேரறிஞர் | சி.கதிர் மகாதேவன் | மதுரை |
| பேரறிஞர் | கு. துரைராசு | எட்டையபுரம் |
| பேரறிஞர் | அ-அ. மணவாளன் | சென்னை |
| பெரும்புலவர் | இரா. இளங்குமரன் | அல்லூர், திருச்சி |
| பேரறிஞர் | அ. தட்சிணாமூர்த்தி | தஞ்சாவூர் |
| பேரறிஞர் | எஸ்.எம். கமால் | இராமநாதபுரம் |
| பேரறிஞர் | ஈ.கே. இராமசாமி | மதுரை |
| பேராசிரியர் | சே. அரிராமநாதன் | மதுரை |
| பேரறிஞர் | அ.மா. பரிமணம் | தஞ்சாவூர் |

# செந்தமிழ்

## திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 1000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ 6 | |

மதிப்புறு ஆசிரியர் **மா. தனுக்கோடி பாண்டியன்** பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1

ஆசிரியர் பேரறிஞர் **நா. பாலுசாமி**
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பி.எச்.டி.,

# பொருளடக்கம்


1. எல்லோர்க்கும் தொல்காப்பியம் ... 263
*பேரறிஞர் நா. பாலுசாமி*

2. பாரதிதாசன் படைப்புகளில் காதல் .... 275
*பேரறிஞர் பழ. முத்துவீரப்பன்*

3. நார்மன் அரசர்கள்
*பேரறிஞர் பா. சூரியநாராயணன்* .... 284

4. இரு போகம் .... 290
*பேரறிஞர் ம.ரா.போ. குருசாமி*

3. பதிற்றுப்பத்தின் சொற்கொடை ... 297
*பேரறிஞர் அ.மா. பரிமணம்*

# எல்லோர்க்கும் தொல்காப்பியம்

- *பேரறிஞர்* நா. பாலுசாமி

*(முன் இதழ்த் தொடர்ச்சி)*

## சூத்திரம் 348

*அவற்றுள்,*
**விறப்பே வெரூஉப் பொருட்டும் ஆகும்.**
மேலே கண்ட மூன்று உரிச் சொற்களுள் விறப்பு என்பது அச்சப் பொருளும் தரும்.

(எ.டு) "கோடு முற்றி அளந்த காரொடு விறந்தே"
இங்கு விறந்து என்பது அச்சம் என்ற பொருளில் வந்துள்ளது.

## சூத்திரம் 349

**கம்பலை - சும்மை கலியே அழுங்கல்**
**என்றிவை நான்கும் அரவப் பொருள**
*கம்பலை, சும்மை, கலி, அழுங்கல்* ஆகிய நான்கு உரிச்சொற்களும் ஓசை என்னும் பொருளில் வரும்.

(எ.டு) "கம்பலை மூதூர்" - ஆரவாரம் என்னும் பொருள்.
ஊர் சும்மை உடைத்து - ஒலி, ஆரவாரம்
கலிகெழு மூதூர் - ஆரவாரம் மிக்க பழைய ஊர்
அழுங்கல் மூதூர்
இவ்வாறு இந்நான்கும் ஓசை (ஆரவாரம்) பற்றி வந்தன.

## சூத்திரம் 350

அவற்றுள்
**அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும்**
அழுங்கல் என்பது மேலும் இரக்கம், கேடு என்னும் பொருள்களிலும் வரும் என்பதாம்.

(எ-டு) மகனை இழந்து அழுங்கலை
-இங்கு இரங்கினார் என்பது பொருள்
-செலவு அழுங்கினார் - ஒழிந்தார், கெட்டார் என்பது பொருள்.

## சூத்திரம் 351

***கழும் என் கிளவி மயக்கம் செய்யும்***

கழும் என்னும் உரிச்சொல் மயக்கக் குறிப்பை உணர்த்தும்

(எ-டு) கழுமிய ஞாட்பு - மயங்கிய போர்க்களம்
(ஞாட்பு - போர், போர்க்களம்)

## சூத்திரம் 352

**செழுமை வளனும் கொழுப்பும் ஆகும்.**

செழுமை என்னும் உரிச்சொல் வளம், கொழுப்பு ஆகிய பொருள்களில் வரும்.

.(எ-டு) செழும் செந்நெல் - வளமான செந்நெல் என்பதாம். செழும் தடி தின்ற செந்நா ஏற்றை - கொழுப்பு சேர்ந்த இறைச்சித் துண்டு என்பது பொருள்.

## சூத்திரம் 353

***விழுமம் சீர்மையும் இடும்பையும் செய்யும்***

விழுமம் என்றும் உரிச்சொல் சீர்மை, துன்பம் இரு பொருள் தரும்.

(எ-டு) விழுமியர் - சீரியர் ( சிறந்தவர் ) என்பதாம். விழுமம் உற்றிருந்தார் - துன்பம் உற்றிருந்தார்.

## சூத்திரம் 354

**கருவி தொகுதி**

## சூத்திரம் 355

**கமம் நிறைந்து இயலும்.**

.(எ-டு) கருவி வானம் - மின்னல், இடிமுழக்கம், காற்று எனத் தொகுதியாக வரும் மேகம்

கமஞ் சூல் மாமழை - நிறைந்த சூல் கொண்ட மேகம்.

## சூத்திரம் 356

**அரியே ஐம்மை**

## சூத்திரம் 357

**கவவு அக்திடுமே**

.(எ-டு) அரிமயில் திரள் முன்கை - ஐம்மயிர் திரள் முன்னகை, (ஐம்மை - மென்மை)
கவவுக்கை நெகிழாமல் - அகத்திட்டகை நெகிழாமல் (கவவு - இறுகப்பிடித்தகை)

## சூத்திரம் 358

**துவைத்தலும் சிலைத்தலும் இயம்பலும் இரங்கலும் இசைப்பொருட் கிளவி என்மனார் புலவர்.**

1. வரிவளை துவைப்ப - சங்கு இசைப்ப
2. கலையின் இரவை சிலைப்ப - மானின் குரல் இசைப்ப
3. இயமர இயம்பும் - ஒலிக்கும்
4. முரசு இரங்கு முற்றம் - இசைக்கும் என்பதாம்.

## சூத்திரம் 359

அவற்றுள்
**இரங்கல் கழிந்த பொருட்டும் ஆகும்.**
இரங்கல் என்பது கழிந்தது என்னும் பொருளிலும்வரும்.

.(எ-டு) "உடையது இழந்து உயிர் இரங்கி இருந்தார்" - இங்குக் கழிந்தது என்னும் பொருளில் வந்தது.

## சூத்திரம் 360

**இலம்பாடு ஒற்கம் ஆயிரண்டும் வறுமை**
இலம்பாடு, ஒற்கம் - இவ்விரண்டு உரிச்சொற்களும் வறுமை என்னும் பொருளவாம்.
(எ-டு) "இலம்பாடு நாணுத் தரும்" - இங்கு இலம்பாடு வறுமை குறித்தது:
ஒற்கம் தீர்க்கும் - ஒற்கம் வறுமை திர்க்கும் எனப் பொருள்பட்டது.

## சூத்திரம் 361

**நெமிர்தலும் பாய்தலும் பரத்தற் பொருள**
நெமிர்தல், பாய்தல் - இவ் இரண்டும் பரத்தல் என்னும் பொருளில் வரும்.
(எ-டு) மணல் நெமிரிய - மணல் பரந்த குருதிப்புனல் பாய்ந்து - இரத்த வெள்ளம் பரந்து - இவ்வாறு பரந்தது என்னும் பொருள் தந்தன.

## சூத்திரம் 362

***கவர்வு விருப்பாகும்***

## சூத்திரம் 363

***சேரே திரட்சி***

## சூத்திரம் 364

***வியலென் கிளவி அகலப் பொருட்டே***

கவர்வு, சேர், வியல் - இம்மூன்று உரிச்சொற்களும் முறையே விருப்பம், திரட்சி, அகலம் என்னும் பொருளில் வரும்

(எ-டு) கவர் நடைய புரவி - விரும்பப்படும் நடையை உடையகுதிரை. சேர்ந்து செறி குறங்கு - திரண்ட தொடை ( குறங்கு - தொடை) வியலிரு வானம் - அகன்றவானம்.

## சூத்திரம் 365

***பே நாம் உரும் என வரூஉம் கிளவி***
***ஆ முறை மூன்றும் அச்சப் பொருள்***

பே, நாம், உரும் - இம்மூன்றும் அச்சம் என்னும் பொருள் தரும்.

(எ-டு) பே. எ. முதிர் கடவுள் - அச்சம் தரும் தெய்வம், நாம் வரும் துறை - அச்சம் தரும் துறை. உரும் இல் சுற்றம் - அச்சம் இல்லாத சுற்றம் என வருவன காண்க. நாம் - என்பது நாம என வரும்

## சூத்திரம் 366

***வய வலியாகும்***

## சூத்திரம் 367

***வாள் ஒளியாகும்***

## சூத்திரம் 368

***துய என் கிளவி அறிவின் திரிபே***

- வய, வாள், துய - இம் முன்று உரிச்சொற்களும், முறையே வலிமை , ஒளி, திரிபு என்னும் மூன்று பொருள்களில் வரும்

(எ-டு) வயக்களிறு - வலிமை மிக்கயானை. கண் வாள் இழந்தன

-ஒளி இழந்தன. துயவுற்றேம்யாம் - யாம் அறிவு திரிந்தேம்.

## சூத்திரம் 369

**உயாவே உயங்கல்**

## சூத்திரம் 370

**உசாவே சூழ்ச்சி**

## சூத்திரம் 371

**வயா என் கிளவி வேட்கைப் பெருக்கம்:**

உயா, உசா, வயா - இம்மூன்றும் முறையே

(எ-டு) உயா விளி பயிற்றும் - உயங்கு விளி பயிற்றும். உசாத்துணை - ஆலோசனை கூறும் துணை. கூழ் கண்டு வயாவினார் - வேட்கை ( விருப்பம் ) ஆயினார் என வரும்

## சூத்திரம் 372

**கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள**

கறுப்பு, சிவப்பு - இவ்விரண்டும் கோபம் என்னும் பொருளில் வரும்.

(எ-டு) கறுத்து வந்தார் - கோபித்து வந்தார் சிவந்து நோக்கினார், கோபமாகப் பார்த்தார் - இவ்வாறு வெகுளி ( சினம் ) என்னும் பொருள் தந்தன.

## சூத்திரம் 373

**நிறத்து உரு உணர்த்தற்கும் உரிய என்ப.**

கறுத்த பசு - கரிய நிறம உடைய பசு.

சிவப்பு மலர் - சிவந்த நிறம் கொண்ட பூ - இவ்வாறு கறுப்பும் சிவப்பும் ஆகிய இரண்டும் வெகுளிப் பொருள் உணர்த்துவதோடு, நிற வேறுபாட்டையும் உணர்த்தும்.

என்பதாம்.

## சூத்திரம் 374

**நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை.**

நொசிவு, நுழைவு, நுணங்கு என்னும் பண்பு, உணர்த்தும் சொற்கள் நுண்மை ( நுண்ணிய தன்மை) என்னும் பொருள் உணர்த்துவன.

(எ-டு) நொசி மருங்குல் - நுண்ணிய இடை; நுழை நூல் கலிங்கம்

-நுண்ணிய நூலால் ஆன ஆடை; நுணங்கு துகில் - நுண்ணிய இழையாலான ஆடை

## சூத்திரம் 375

***புனிறு என் கிளவி ஈன்றணிமைப் பொருட்டே.***

புனிறு என்னும் உரிச்சொல், கன்றினை ஈன்ற அணிமை (அப்போதே) என்னும் தொடரில் அண்மை என்னும் பொருளில் புனிறு என்பது வந்துள்ளது.

## சூத்திரம் 376

***நனவே களனும் அகலமும் செய்யும்***

நன என்னும் உரிச்சொல் இடத்தையும், அகலம் என்னும் பரப்பையும் உணர்த்தும்

(எ-டு) நனவுப் புகு விறலி - களத்தில் புகும் விறலி
நனந்தலை உலகு - இடமகன்ற உலகம்

## சூத்திரம் 377

***மதவே மடனும் வலியும் ஆகும்.***

மத என்னம் உரிச்சொல் மடம் (மதர்த்த), வலிமை ஆகிய பொருள்களில் வரும்.

(எ-டு) மதைஇய நோக்கு - மதர்த்த பார்வை.
மதகளிறு - வலிமை வாய்ந்த களிறு.

## சூத்திரம் 378

***மிகுதியும் வனப்பும் ஆகலும் உரித்தே***

மத என்னும் உரி மேலே குறித்த பொருளைத் தவிர மேலும் மிகுதி, அழகு என்னும் இரு பொருள் தரும்.

(எ-டு) மதகளிறு - மதம் மிக்க களிறு
மதவினள் இவள் - மிக்க அழகுடையவள் இவள்.

## சூத்திரம் 379

***புதிதுபடல் பொருட்டே யாணர்க் கிளவி***

யாணர் என்னும் உரிச்சொல் புதுமை, புதிய என்னும் பொருளில் வரும்.

(எ-டு) யாணர்ப்பேரூர் - புதிய வருவாயைத் தரும் நகர்.

## சூத்திரம் 380

***அமர்தல் மேவல்***

## சூத்திரம் 381

***யாணுக் கவினாம்***

அமர்தல், யாணு - இவ் இரு உரிச்சொற்களும் முறையே மேவுதல், அழகு என்னும் பொருள்களில் வரும்

(எ-டு) "அகன் அமர்ந்து செய்யாள் உறையும்" - பொருந்தி (மேவல்), யாணது பசலை - அழகினிடத்து பசலை.

## சூத்திரம் 382

***பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள***

பரவு, பழிச்சு - இவ் இரண்டும் வழுத்துதல், போற்றுதல் வணங்குதல் என்னும் பொருளதாம்

(எ-டு) கடவுள் பரவினார் - கடவுளை வணங்கினார்
கைதொழுது பழிச்சி - கையால் வழுத்தி (அ) வணங்கி

## சூத்திரம் 383

(கடி - பலபொருள் தரும் உரிச்சொல்)

***கடிஎன் கிளவி***
***வரைவே கூர்மை காப்பே புதுமை***
***விரைவே விளக்கம் மிகுதி சிறப்பே***
***அச்சம் முன்தேற்று ஆயீ ரைந்தும்***
***மெய்ப்படத் தோன்றும் பொருட்டா கும்மே.***

கடி என்னும் உரிச்சொல் வரைவு முதல் முன்தேற்று முடிய உள்ள பத்து வகைப் பொருள்களில் வரும்.

(எ-டு) ஊர் கடிந்தார் - ஊரை வரைந்தார் (நீங்கினார்) என்பதாம்
வாள் வாய் கடிது - வாளின் நுனி கூரியது (கூர்மை)
கடி நகர்- காவல் மிகுந்த நகர் (காப்பு)
கடித்தளி - புதியதளிர் (புதுமை)
கடிது வந்தார் - விரைவாக வந்தார் (விரைவு)
கடும் பகல் - கடும் பகல் - ஒளிமிக்க பகல் நேரம் (விளக்கம்)

கடும் புனல் - மிக்க புனல் (மிகுதி) சிறந்த புனலுமாம் (சிறப்பு)
*கடுங்கண் யானை - அஞ்சத்தக்க யானை (அச்சம்)*
கடுஞ்சூள் தருகுவன் - முன்னின்று தேற்றம் (தேற்றம்) தருவான்.

## சூத்திரம் 384

**ஐயமும் கரிப்பும் ஆகலும் உரித்தே**
*மேலே கூறிய கடி என்னும் உரிச்சொல் ஐயம், கரிப்பு ஆகிய பொருள்களிலும் வரும் என்பதாம்.*

(எ-டு) கடுத்தனள் அல்லளோ அன்னை - சந்தேகப்பட்டாளோ அன்னை (ஐயம்)
கடி மிளகுதின்ற கல்லாமந்தி - காரமான மிளகுதின்ற அறிவிலாமந்தி (கரிப்பு)

## சூத்திரம் 385

**ஐ வியப்பாகும்.**

## சூத்திரம் 386

**முனைவு முனிவாகும்**

## சூத்திரம் 387

**வையே கூர்மை**

## சூத்திரம் 388

**எறுழ் வலியாகும்**
*ஐ, முனைவு, வை, எறுழ் ஆகிய நான்கும் முறையே வியப்பு, முனிவு, கூர்மை, வலிமை ஆகிய பொருள்களில் வரும்.*

(எ-டு) "ஐதே காமம் யானே" - காமம் வியக்கத்தக்கது (வியப்பு)
சேற்று நிலை முனைஇய- சேற்றினை முனிந்த (முனிவு)
வைவாள் - கூர்மையான வாள் (கூர்மை)
எறுழ்த் தோள் - வலிமையான தோள் (வலிமை)

## சூத்திரம் 389

**மெய்பெறக் கிளந்த உரிச்சொல் எல்லாம்**

***முன்னும் பின்னும் வருபவை நாடி***
***ஒத்தமொழியால் புணர்த்தனர் உணர்த்தல்***
***தத்தம் மரபில் தோன்றும்ன் பொருளே***

இந்தச் சொல் இந்தப் பொருளுக்கு உரியது என மேலே கூறப்பட்ட உரிச்சொற்கள் எல்லாவற்றையும், அவற்றிற்கு முன்னும் பின்னும் வரும் சொற்களை ஆராய்ந்து அவற்றுள் தகுதியான சொல்லால் ஒரு பொருளை உணர்த்துக. அவ்வாறு உணர்த்தவே, வரலாற்று முறையில் தத்தமக்குரிய பொருள் விளங்கும் என்பதாம். வரலாற்று முறை என்பது தொன்று தொட்டு வழங்கி வரும் மூறை.

(எ-டு) "செல்லல் இன்னல் இன்னாமையே" - இச்சூத்திரத்தில் செல்லலும் இன்னலும் ஆகிய இரண்டு உரிச் சொற்களும் வறுமை என்னும் பொருள் தரும் எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இச்சொற்கள் இப்பொருள் தருவது. உலகியல் வழக்குப்படி அன்று, ஆசிரியர் கூறினார் ஆகவே கொள்ளப்படும் என்பதாயிற்று. "வியன் மார்பு அணங்கிய செல்லல்" எனச் செல்லல் என்பதன் முன்னும் பின்னும் வரும் சொற்களை வைத்துப்பார்த்தால், இங்குச் செல்லல் என்பது துன்பம் என்னும் பொருளில் வந்துள்ளமை காணலாம்.

## சூத்திரம் 390

***கூறிய கிளவிப் பொருள் நிலை அல்லது***
***வேறு பிற தோன்றினும் அவற்றொடு கொளலே***

முன்னும் பின்னும் வரும் சொற்களை ஆராயும்போது, ஓர் உரிச்சொற்குக் கூறப்பட்ட கொருளே அன்றி, வேறு பொருள் தோன்றினாலும், அதனையும் சேர்த்துக் கொள்க என்பதாம்.

(எ-டு) "கடி நாறும் பூந்துணர்" - இதில் கடி என்பது முன்னும் பின்னும் வரும் சொற்களைப் பார்க்கும்போது, நாட, வரைவு என்னும் பொருள்களுக்குப் பொருந்தாமல், மணம் என்னும் பொருள் தருவதாயிற்று. பிறவும் இவ்வாறே கொள்க.

## சூத்திரம் 391

*பொருட்குப் பொருள் தெரியின் அதுவரம்பு இன்றே.*
ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் கூறும் போது, அப்பொருளை உணர்த்தும் சொற்கும் பொருள் யாது எனத் தெரியமுற்பட்டால் அதற்கு முடிவே இல்லாமல் போய்விடும். எனவே அவ்வாறு கேட்டல் தவறாம்.

(எ-டு) "உறு" என்னும் உரிச்சொற்குப் பொருள் ஒருவன் கேட்பின் "மிகுதி" என்பது அதன் பொருள் என்போம். அவன் மீண்டும் "மிகுதி" என்பதன் பொருள் யாது எனக் கேட்க முற்பட்டால், ஒன்றைவிடப் பெரிதாக மற்றொன்றைக் கூறி விளக்கலாம், அப்போதும் அவன் நிறுத்தாமல் வேண்டுமென்றே, பெரிது என்பதன் பொருள் என்ன எனக் கேட்டால், முடிவே இல்லாமல் போகும். எனவே இவ்வாறு கேட்டால் கூடாதாம்.

## சூத்திரம் 392

*பொருட்குத் திரிபில்லை உணர்த்த வல்லின்.*
ஒரு சொல்லின் பொருளைப் பிறர்க்கு உணர்த்தும்போது, அதனைக் கேட்போரது உணர்வின் தன்மையை அறிந்து உணர்த்தினால், பொருள் தானே புரியும் என்பதாம். கேட்போரினும் உணர்த்துவோர் (கூறுவோர்) மிக்க திறமை உடையவராயிருத்தல் வேண்டும். திரிபில்லை - மயக்கம் இல்லை, தெளிவாம்.

(எ-டு) உறுபொருள் - உறு என்பது மிகுதி என்னும் பொருளது. மிகுதி என்பதையும் நன்கு விளக்க எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

## சூத்திரம் 393

*உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே.*
வெளிப்படையாகத் தொடர் மொழியாலும், பொருளைக் காணுமாறு காட்டுதலாலும் உணர்த்தியும் உணர முடியாதவனைப் பற்றிக் கவலை வேண்டா, அவனைத் திருத்தவே முடியாது, உணர்த்தியும் பயனில்லை.

## சூத்திரம் 394

***மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா.***

ஒரு சொல்லுக்குப் பொருள் கூறும்போது, அப்பொருளை அது எவ்வாறு குறிக்கும் என்பார்க்குப்பதில் கூற இயலாது. அது தொன்று தொட்டு வந்தது என்பதாம்.

(எ-டு) மரம், யானை, இவை எவ்வாறு அப்பொருளைக் குறிக்கும் என்று கேட்டால், அவை மரபுவழியாகத் தொன்று தொட்டுப் பெரியோர்களால் வழங்கி வந்தவையாம் என்பதுதான் பதில். வேறு காரணம் கூறமுடியாது.

## சூத்திரம் 395

***எழுத்துப் பிரிந்து இசைத்தல் இவண் இயல்பு இன்றே.***

பெயர், வினைச் சொற்களைப் பிரித்து, பகுதி, விகுதி என்று வழங்குவது போல, உரிச் சொற்களைப் பிரிக்க முடியாது. பிரித்தால் பொருள் தராது. வழக்கமும் இல்லை.

## சூத்திரம் 396

***அன்ன பிறவும் கிளந்த அல்ல***
***பன்முறை யானும் பரந்தன வரூஉம்***
***உரிச்சொல் எல்லாம் பொருட்குறை கூட்ட***
***இயன்ற மருங்கில் இனைத்து என அறியும்***
***வரம்புதமக்கு இன்மையின் வழிநனி கடைப் பிடித்து***
***ஓம்படை ஆணையில் கிளந்தவற்று இயலான்***
***பாங்குற உணர்தல் என்மனார் புலவர்***

(ப.ரை.) அன்ன பிறவும் - மேலே கூறப்பட்ட உரிச்சொற்களே அன்றிப் பிற உரிச் சொற்களும், கிளந்த அல்ல - மேலே வரையறுத்துக் கூறியதுபோல் அல்லாமல், பன்முறை யாலும் - பல வகையாலும், பரந்தன வரூஉம் - பரந்துபட்ட மிகப் பலவாய் வரும், உரிச்சொல் எல்லாம் - உரிச்சொற்கள் எலலாம், பொருள் குறை கூட்ட - பொருள் நிரம்புமாறு 'உ' என்னும் எழுத்தைக் கூட்ட (உற் + உ உறு என்பது போல) இயன்ற மருங்கில் - இயலும் இடத்து, இனைத்து - என அறியும் - இத்துணை என அறியும், வரம்பு தமக்கு

இன்மையால் - எல்லை தமக்கு இல்லையாதலால், வழிநனி கடைப் பிடித்து - சான்றோர் மரபு வழியில் கூறியவற்றைக் கடைப்பிடித்து, ஓம்படை ஆணையில் - பொருளோடு பொருத்தி உணர்த்த இசை, குறிப்பு, பண்பு பற்றி முன்பு ஓப்பிட்ட இலக்கணத்திற்குறையாமல், அதன் வழியே, பாங்குற உணர்தல் - முறையாக உணர்க, என்மனார் புலவர் - என்று கூறுவர் ஆசிரியர். உரியியலில் கூறப்பட்ட பல்வேறு வகையான உரிச் சொற்களே அல்லாமல், அவை போன்ற பிற உரிச் சொற்களையும், இலக்கண நெறி மாறாமல், ஆராய்ந்து பொருள் அமைத்துக் கொள்க என்பதாம்.

*( தொடரும்.....)*



# பாரதிதாசன் படைப்புக்களில் காதல்

-பேரறிஞர் பழ. முத்துவீரப்பன்

பாரதிதாசன் தமிழும் தமிழினமும் தலைநிமிர்ந்து நிற்கவேண்டும் என்று விரும்பிய குறிக்கோட் கவிஞர். பண்டைத்தமிழ் இலக்கியங்களைப் பழுதறக் கற்ற புலவர். பிரெஞ்சுப் பண்பாடு ஊடுருவியிருந்த புதுவையில் வாழ்ந்தவர். எனவே, இனிக்கும் முத்தமும், துடுக்கு முத்தமும், எதிர்பாராத முத்தமும் அவர் கவிதைகளில் மிகுதி. பழந்தமிழ் இலக்கியங்கள் காதலைப் பற்றிக் கூறியுள்ள கருத்துக்களில் பெரிதும் உடன்பாடுடையவர். எனினும், காலமாறுதலுக்கேற்ப, சமுதாயத்தேவைக்கேற்பக் காதல் நிலையிலும் புதுமைகாண விரும்பியவர்.

காதல் என்பது உடல் சம்பந்தப்பட்டது மட்டும் அன்று. உடலும் உள்ளமும் இரண்டறக்கலப்பதே காதல். காதலைப்பற்றிய பாவேந்தரின் கருத்துக்களிலும் பழமையிலே புது நினைவு பாய்ந்தெழப் பார்க்கிறோம்.

## தனிக்கூறுகள்

பாரதிதாசன் படைப்புக்களில் காதல், அரசியல், சமுதாய மாற்றத்திற்குக் கருவியாகத் திகழ்கிறது என்று காட்டியிருப்பதும், இளையோர் காதலை இனிக்கப் பாடியிருப்பது போல முதியோர் காதலை அழுத்தமாகச் சொல்லியிருப்பதும், காதல் நிலையில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களையும் பேசவைத்துப் பண்டை இலக்கண மரபுகளை மீறியிருப்பதும், அவர் ஒரு புரட்சிக்கவிஞர் என்பதை நிறுவும் தனிக்கூறுகள் ஆகும்.

சாதி மத பேதமற்ற சமுதாயம் அமைக்க விரும்பிய தாசன், சாதி மதம் கடந்த காதலையே வெற்றிபெற வைத்துள்ளார். 'காதல் அடைதல் உயிரியற்கை' என்று பாடும் தாசன், காதல் சாதியைவிட, மதத்தைவிட உயர்ந்தது என்று காட்டியுள்ளார். ஆனால், மொழியா, காதலா என்ற கேள்வி எழும்போது காதலைவிட மொழியே சிறந்தது என்றுணர்த்தக் காண்கிறோம். பாரதிதாசனின் அழுத்தமான மொழிப்பற்றை இஃது உணர்த்தினாலும், காதல் மொழியையும் கடந்த பெருஞ்சக்தி வாய்ந்தது என்பதே உண்மையாகும். ஒரே சாதியைச் சார்ந்தவர்கள் காதல் கொண்டால், அது வெற்றி

பெறுவதைப்போலப் பாரதிதாசன் படைக்கவில்லை. 'எதிர்பாராத முத்தம்' இதற்குச் சான்று. வெவ்வேறு சாதியைச் சார்ந்தவர்கள் கொண்ட காதல், தடைகளைத் தாண்டித் தழுவுகிறது என்பதையே அவர் படைப்புக்களில் பார்க்கிறோம். அரசன் மகன் பூக்காரியை விரும்புவான். அரசன் மகள் வேலைக்காரனை விரும்புவாள், அல்லது கவிஞனைக் காதலிப்பாள். தாசன் இனம் மீறிய காதலை விரும்பியவர் என்பது இப்பாடல்களால் புலனாகிறது. பால்காரன், பூக்காரி, குறவன், குறத்தி, மாடுமேய்ப்பவன், இரும்பாலைத் தொழிலாளி, தறிநெய்பவன், ஆலைத்தொழிலாளி என்று சமுதாயத்தின் அடிமட்டத்து மக்களுக்கும் 'காதல்' உண்டு என்று காட்டியவர் புரட்சிக்கவிஞர்., சில நயமான காதற்காட்சிகளை, காதல் உணர்வுகளை, காதல் வருணனைகளை இனிக்காண்போம்.

## ஆணுக்கும் அச்சமுண்டு

சுந்தரன் என்னும் இளைஞன் ஒருவன் தன் வீட்டுக்கூடத்தில் பாடம் படித்திருந்தான். சொர்ணம் என்னும் பாட்டுச்சுவை மொழிப்பாவை அங்கு வந்தாள். என்ன நடந்தது?

*கூடத்திலே மனப்பாடத்திலே - விழி*
*கூடிக்கிடந்திடும் ஆணழகை*
*ஓடைகுளிர்மலர்ப் பார்வையினால் - அவள்*
*உண்ணத் தலைப்படும் நேரத்திலே*
*பாடம் படித்து நிமிர்ந்த விழிதனிற்*
*பட்டுத் தெறித்தது மானின் விழி!*
*ஆடை திருத்தி நின்றாள் அவள்தான் - இவன்*
*ஆயிரம் ஏடு திருப்பு கின்றான்.*

பார்ப்பது என்பது இயல்பானது; நோக்குவது என்பது நுட்பமானது. சொர்ணம் பார்க்கவில்லை. நோக்கவில்லை. அவன் அழகை உணர்கிறாள். அவனைக் காணவேண்டும் என்று என் கண்கள் என்னைத் தின்னுகின்றன என்பாள் திருக்குறள் தலைவி. அதுபோல, இங்கே ஆணழகைப் பெண் உண்ணத் தொடங்குகிறாள். இயல்பாக ஆடவன் நிமிர்ந்து பார்க்கிறான். இருவர் விழிகளும் ஒன்றையொன்று மருவுகின்றன. அண்ணலும் அவளும் நோக்கும்போது அண்ணல் அவள் கொங்கைகளைப் பார்த்தான். அவள் அவன் தோள்களைப் பார்த்தாள் எனப் புலன் இன்பம் தோன்றப் பாடுவான் கம்பநாடன். எல்லா ஆண் பெண்களுக்கும் இயல்பானது.

*கன்னி அனுப்பும் புதுப்பார்வை - அவன்*
*கட்டுடல் மீதுலும் தோளினிலும் சென்று*
*மின்னலின் மீண்டது - கட்டழகன் தந்த*
*விண்ணப்பம் ஒப்பினள் புன்னகையால்*

என்று புலன் இன்ப உர்வை வேறோரிடத்தில் பேசியுளாளார். பாரதிதாசன். உதாரனை அமுதவல்லி பார்த்தபொழுது அவன் தாமரைக் கண்களையும், பின் ஓங்கிய தோள்களையும், குறைவில்லாச் சித்திரம் போன்ற உடலழகையும் கண்டாள் என்று மற்றோரிடத்தில் காட்டியுள்ளார். ஆனால், இங்குத் தமிழ்ப் பண்பாடு தோன்றப் பாடுகின்றான். உள்ளத்து ஆசையை எல்லாம் கண்ணில் வைத்துக் காட்டிவிட்டாள் அந்தக் காரிகை. கற்றுவிட்டான் அந்தக் காளை. உள்ளக்களவு நிகழ்ந்துவிட்டது. காதல் எண்ணத்தைக் கண்வழி சொன்னவருக்கு உள்ளம் நெகிழ்ந்ததால் உடல் நெகிழ்ந்தது. உடல் நெகிழ்ந்ததால் ஆடை நெகிழ்ந்தது. ஆடை நெகிழ்ந்தாலும் திருத்தலாம்; நெகிழாமலும் திருத்தலாம். திருத்தமுள்ள ஆடைகளைத் திருத்திக் கொள்கிறாள் என்றும் கொள்ளலாம். எப்படியோ இதன்மூலம் அவனை வருத்திக்கொள்கிறாள். ஆடை திருத்தும் நிலையில் அவள் அழகை அள்ளிப் பருகிவிட்டான் அந்த ஆணழகன். கணநேரம்தான். ஆனால், அது மனநேரம். தவறு செய்துவிட்டோமோ என்று கையும் களவுமாகப் பிடிபட்ட கள்வன் போலத் தடுமாறுகிறான் அந்த இளைஞன். அதனால், ஆயிரம் ஏடு திருப்புகிறான். இவ்வாறு பண்பாட்டிற் சிறந்த ஆண்மகனின் அச்சத்தை அழகுபடச் சித்தரித்துள்ளார். கவிஞர்.

## பெண்ணுக்கும் பேச்சுண்டு

தன் காதல் ஆசையை ஆணின் முன் வெளிப்படையாகப் பேசுவது பெண்ணின் நாணத்திற்கும் மடத்திற்கும் பொருந்தாத பண்பு. புது மண் பானையில் வைத்த நீர் இலேசாகக் கசிவதுபோல அகவாழ்க்கையில் பெண்கள் தங்கள் காதல் உணர்வுகளைக் குறிப்பாகவே புலப்படுத்தவேண்டும் என்பார் தொல்காப்பியர். ஆனால், பெண்களை எல்லாவகைளிலும் ஏற்றப்படுத்த வேண்டும் என்று விரும்பிய புரட்சிக்கவிஞர் பேரின்பத்துயிலும் பெண்களைப் பேசவிடும் புரட்சியை அளவின்றிச் செய்கிறார்.

*'வெடுக்பென்று தான் அணைத்தான்*
*விடாதீர் என்றாள்'*
*என்று பூங்கொடியும்,*
*'மோத வரும் ஆணழகே வா வா வா*
*முத்தம்வை வைமுத்தம் வை இன்னொன்று'*
*தலைவியும்,*
*'தென்றல் நம் இடைச் செல்ல*
*விடாதீர் என்றாள் என்று*
அன்னமும்,
பாரதிதாசன். உதாரனை அமுதவல்லி பார்த்தபொழுது அவன்,
'என்றன் கரத்தால் இறுக உமைத்தழுவி
*நோகாமல் முத்தங்கள் நூறு கொடுப்பேன் என்றாள்'*
*என்று 'சஞ்சீவி பர்வதத்தின்' சாரல் வஞ்சியும்,*
*'உள்ளம் பறித்தது நான் என்பதும் என்றன்*
*உயிர் பறித்தது நீ என்பதும்*
*கிள்ளி உறிஞ்சிடும் மாமலர்த்தேன் - இன்பக்*
*கேணியில் கண்டிட வேணும் என்றாள்'*

என்று சொர்ணமும் பெருகிவரும் தங்கள் காதல் ஆசையை,இதழ் பருகும் இன்பத்தை, இடைவெளி இல்லா இன்பப் பிணைப்பை வெளிப்படையாகப் பேசக் காண்கிறோம்.பாரதிதாசன் காட்டும் தலைமகள்,

*'காய்ச்சிய இரும்பாயிற்றுக் காதலால் எனது தேசம்*
*பழத் தோட்டம் அங்கே தீராப்*
*பசிகாரி இவ்விடத்தில்'*

என்று எழுத்திலும் தன் ஆசையைப் பதிவுசெய்ய் காண்கிறோம்.

*'பெருந்தோள் குறுமகள் சிறு மெல்லகம்*
*ஒருநாள் புணரப்புணரின் அரைநாள்*
*வாழ்க்கையும் வேண்டலென் யானே'*

என்பான் குறுந்தொகைத் தலைவன். 'சேர்ந்திருக்கும்பொழுதே வாழ்ந்திருக்கும்பொழுது' என்பது இந்தத் தலைவனின் எண்ணம். இதன் வளர்ச்சியாகவும் மாற்றமாகவும் அமுதவல்லி,

*ஆரத்தழுவி அடுத்த வினாடிக்குள் உயிர்*
*தீர வரும் என்றும் தேன்போல் வரவேற்பேன்.*
*என்று பேசுகிறாள்.*

காதலுக்குத் தோற்றுவாய் காட்சி. காட்சியில்லாமல் காதல் ஆட்சி இல்லை.

*கண் படைத்த காரணத்தால் அழகியோன் என்*
*கருத்தேறி உயிரேறிக் கலந்து நின்றான்*

எனக் காட்சிநிலையை மிக அழகாக வருணித்துள்ளார் பாரதிதாசன்.

*என் விழி அங்கொரு பொன்மலர் நோக்கி*
*விரைந்தது அது மீளவில்லை*
*பின்னர் அவன்விழி என்னைக் கொன்றது*
*என்னுளம் அவனுளம் இரண்டும் பின்னின*

என்பார் பாரதிதாசன். காதல்காட்சிதான் உள்ளக்கலப்புக்கு அடிப்படை என்பதை இங்குப் புலப்படுத்தியுள்ளார்.

பார்வை இன்பம் தெவிட்டாத தேன் எத்தனைமுறை பார்தாலும் பார்க்கச் சொல்லும்.

*'நூறுமுறை அவள் பார்த்தாள் அவனை*
*நூறுமுறை நோக்கினாள் இனிதுபெற்ற*
*பேறுதனை இழப்பாள் போல் குறட்டினின்று*
*பெயர்ந்த அடி கீழ்ப்படியில் வைக்கமுன்னர்*
*ஆறுமுறை அவள் பார்த்தாள்' அவனும் பார்த்தான்,*
*அவள் வண்டிப்படி மிதித்தாள் திரும்பிப் பார்த்தாள்,*
*பார்க்கப்பார்க்கப் பசிதீராத அழகு தமிழ்!*

காதலைக் குடும்ப விளக்கில் இவ்வாறு காட்சிப்படுத்தியுள்ளார் கவிஞர்.

## உள்ளக்காதல்

காதலுக்குப் பெரும்பாலும் உடலழகே அடிப்படிடை. உடலழகையும் ஐம்புல ஆசைகளையும் பாரதிதாசன் நன்கு வருணித்துள்ளார். ஒரு தாமரைப் பூவை வருணிக்கிறார்1

*'ஓரிதழ் குழந்தை கன்னம், ஓரிதழ்*
*விழியை ஒக்கும் ஓரிதழ் தன் மணாளன்*
*உருவினை எண்ணி எண்ணிப் பூரிக்கும்*
*உதடு'*

என்று வாய்ச்சுவை இன்பத்தை அற்புதமாக வருணித்துள்ளார்.

உடலழகைக் காதலைப் பேசியிருப்பதுபோல உள்ள உள்ள அழகுக் காதலையும் பெருமைப்படுத்தயுள்ளார். ஒரு காதலி சொல்கிறாள்,

*'அழுக்குத்துணிக்குள்ளே அறத்தோடு பிணைந்துள்ள*
*அவ்வுயிரே என்றன் ஆருயிராம்'*

"அழுக்குத்துணி அணிந்திருப்பவன் என்பதால் அவன் ஏழை உழைப்பாளி என்பது புலனாகிறது. அறத்தோடு பிணைந்துள்ள என்பதால் அவன் நேர்மையான உள்ளம் கொண்டவன் என்பது தெரிகிறது. அவ்வுயிரே என்றன் ஆருயிர் என்பதால் இருவர் ஒருவர்மீது ஒருவர் வைத்திருக்கும் அளப்பரிய காதல் வெளிப்படுகிறது. உள்ளமொன்றிய உரு ஏழைகளின் உயிர்க்காதலை இவ்வாறு ஓவியப்படுத்தியுள்ளார் பாரதிதாசன்" என ஒரு கதிறனாய்வாளர் விளக்குவது பாராட்டத்தக்கதாகும்.

புரட்சிக்கவி, கடல்மேற்குமிழிகள், காதலா கடமையா ஆகிய கதைப்பாடல்களில், முடியாட்சி குடியாட்சியாக மாறக் காதல் காரணமாக அமைந்தது என்று காட்டியுள்ளார். புரட்சிக்கவிஞர்.

புரட்சிக்கவியில அரசன் மகள் அமுதவல்லி கவிஞன் உதாரனைக் காதலிக்கிறாள். அவள் கொள்ளை வனப்பில் தன்னை முற்றும் பறிகொடுத்தான் கவிஞன். இதனை,

*'அவள் கொள்ளை வனப்பினிலே - என்னைக்*
*காமனும் கள்ளிடக் காலிடறிற்றுக்*
*கவிழ்ந்த வண்ணம் வீழ்ந்தேன்,*

எனத் தான் வீழ்ந்த கதையை விவரிக்கிறான் உதாரன். இருப்பினும் அவள் அரசன் மகளாயிற்றே என அஞ்சுகிறான். உள்ளம் ஒன்றுபட்டபின் உயர்வு தாழ்வு என்பது ஒருசிறிதும் இல்லை. சாதி உயர்வென்றும், செல்வத்தால் உயர்வென்றும் தொழிலாளர் சமூகம் இழிவென்றும் காலமெல்லாம் ஏய்த்துவரும் பாவிகளைத் திருத்த நம் இருவர் ஆவிகளையேனும் அர்ப்பணிப்போம் என்று தன் காதல்மீது ஆணையிட்டுக் கூறுகிறாள் அமுதவல்லி. இருவரின் காதலையும் நேருக்கு நேர் கண்டறிந்த அரசன் உதாரனைச் சிரச்சேதம் செய்ய் கட்டடையிடுகிறான். அப்போது.

*'சாதல் எனில் இருவரும் சாதல் வேண்டும்*
*தவிர்தல் எனில் இருவரும் தவிர்தல் வேண்டும்'*

என்று தலைவி முழங்குகிறாள், அவளையும் கொலைசெய்ய ஆணையிடுகிறான் மன்னன். அவையோர் அச்சடித்த பதுமைகளாய் உள்ளனர். பொதுமக்கள் ரத்தச்சேற்றை அருந்தட்டும். நாம் ஒன்றாக இறப்போம் என்று அமுதவல்லி பேசுகிறாள். இதற்குப்பிறகு

வீறுகொண்டெழும் உதாரன் தமிழ் என் ஆவி அழியக்காரணம் என்று சமுதாயம் நினைத்திடும் என்று தவிக்கிறான். அரசன் மகள் தன் நாளில் குடிகட்கெல்லாம் ஆளுரிமை பொதுவாக்க நினைத்திருந்தாள் என்று எடுத்துக்காட்டுகிறான். உதாரனின் புரட்சி உரையால் மக்கள் கூட்டம் குமுறி வெடிக்கின்ற நிலையில் **"அன்பு செய்தோர் படிமீது வாழாரே"** என்று சொல்ல பதைபதைக்கின்றாள் அமுதவல்லி. இதற்குப்பிறகுதான் குடிமக்கள் கொடுவாளைப் பறித்தனர். கொலையாளர் உயிர்தப்பி ஓடலானார். கவிஞனுக்கும் காதலிக்கும் மீட்சி தந்தார். இவ்வாறு அரசன் மகள் அமுதவல்லி கவிஞன் உதாரன் மீது கொண்ட காதல் முடியாட்சி மாறி குடியாட்சி மலரக் காரணமாகிறது.

## முதியோர் காதல்

இளமைக்காதல் எல்லார்க்கும் இயல்பு. அஃது உடலழகின் அடிப்படையில் தோன்றி வளர்வது. ஆனால், முதுமைக்காதல் உள்ளநலத்தால் சிறப்பது. பாரதிதாசன் குடும்ப விளக்கு என்னும் காப்பியத்தில் படைத்துக்காட்டும் தங்கமும் மணவழகரும் முதியோர் காதலை அருமையாக்ப புலப்படுத்துகிறார்கள்.

உருவ அழகில் பிறக்கும் காதல் நீர்க்குமிழி போன்றது. இளமைக்காதல் அணைத்து வாழும்; முதுமைக்காதல் நினைத்து வாழும்; உள்ளம் பிணைத்து வாழும். மணவழகர் உடல்நிலையைக் கவிஞன் வருணிக்கிறான்:

*'பணையுடல் சருகு, வாயிற்*
*பல்லில்லை மயிர் வெண்பட்டே*
*உணவெவாம் பாலின் கஞ்சி*
*உலவுதல் சிறிதே ஆகும்',*

தங்கத்தின் கூந்தலோ நரைத்துவிட்டது. அவள் முகத்தில் ஒளி குறைந்துவிட்டது. ஆனால் அவள் அன்புடல் அறத்தால் தேய்ந்த ஆயிரம் பிறை மூதாட்டி. தங்கத்தின் நெஞ்சில் மணவழகர் தன்னை இளமைதொட்டே விதைத்துள்ளார். மணவழகர் சொல்லுகிறார்:

*புதுமலர் அல்ல காய்ந்த*
*புற்கட்டே அவள் உடம்பு*
*சதிராடும் நடையாள் அல்லள்*
*தள்ளாடி விழும் மூதாட்டி!*
*மதியல்ல முகம் அவட்கு*
*வறள்நிலம்! குழிகள் கண்கள்!*

*எது எனக்கின்பம் நல்கும்*
*இருக்கின்றாள் என்பதொன்றே.*

இருவரும் தனித்தனியே உள்ளனர், ஆனால் ஒருவரையொருவர் நினைக்கின்றனர். எனவே இன்பம் நிலைக்கின்றது. அத்தான் என்ற அவள் அழைப்பில் இன்புற்றது இளமைக்காலம்; அவளை அன்னாய் என மக்கள் அழைப்பது கேட்டுக் களிப்பது முதுமைக்காலம்; பேரர்கள் அம்மாயி என்று அழைப்பதைக்கேட்டு அமிழ்தம் உண்ணும் அன்புக்காலம். தங்கம் சொல்கிறாள் மறைவனைச் சுமக்கும் என்றன் மனம் மட்டும் ஓய்தல் இல்லை. அயலவர் கண்படாமல் அவரைக் காத்துவந்தேன் நான் என்று இளமை நினைவுகளை எண்ணி இன்புறுகிறாள். பேரன் மலைப்பழம் கொண்டுவந்து தங்கத்திற்குத் தருகிறான். அதைத் தாத்தாவுக்குக்கொடு என்று பணித்து கொடுக்கப்போவதைக் கூர்ந்து நோக்குகிறாள். தள்ளாத வயதில் தலையணைக்குக்கீழ் வைத்திருந்த பொரிமா உருண்டைப் பொட்டலத்தை எடுத்துக் கொண்டு தங்கத்திடம் கொடுக்கச் செல்கிறார் மணவழகர். எதிரில் மருமகள் நகைமுத்து வழிமறித்து என்னவேண்டும்?ஏன் வந்தீர்கள் என்னிடம் சொன்னால் நான் செய்யமாடடேனா என்று கேட்க துணைமேலுள்ள அன்பை மறைத்து ஒன்றுமில்லை ஒன்றுமில்லை என்கிறார் மணவழகர். மருமகள் சென்றபிறகு மனைவியிடம் பொரிமா உருண்டையை நீட்டி அவள் உண்ணும் அழகைப்பார்த்துப் பின் நாணிப் பிரிகிறார். மனைவி கொல்லைக்குத் தனியே செல்வதைக்கண்டு மனம் பொறுக்காமல் மருமகளை துணைக்குச் செல்ல அழைப்பார். அவள் துணைசெல்வது கண்டு நெஞ்சம் தணிவார். மணவழகர் மறுபுறம் நகர்ந்தால் அவர் படுக்கையைத் தட்டி விரிப்பினை மாற்றி தலையனை உறை மாற்றுவாள் தங்கம். அவள் அப்போது பெறும் இன்பத்தை மணந்தநாள் பெறுவதைப் பார்க்கிலும் பெறுவாள் இன்பமே! என வருணிப்பார் பாரதிதாசன். மணிமொழியார் என்னும் நண்பர் 105 வயதுவரை நீங்கள் வாழக்காரணம் என்ன என்று கேட்க, மனை விளக்கின் பெருமையை விவரிக்கிறார் மணவழகர். கைகாலில் வலுவில்லை கண்ணில்லை பொறிகள் எல்லாம் செயல் இழந்தன. செய்யும் செயல் எதுவும் இல்லை. நீங்கள் இன்புறுவது என்பது எப்படி என்று மணிமொழியார் கேட்க,

*வாய் மூக்கு கண்காது மெய் வாடினாலும்*
*மனைவிக்கும என்றனுக்கும் மனமுண்டு கண்டீர்!*
*தூய்மையுறும் அவ்விரண்டு மனம் கொள்ளும் இன்பம்*
*துடுக்குடைய இளையோரும் படைத்திடுதல் இல்லை.*

என முதியோரின் உளக்காதல் மனச்சிறகு விரிந்து சாய்வின்றி சறுக்கின்றிச் சளைக்காது இன்பம் கொள்வதை எடுத்துப் பேசியுள்ளார். காதலர்கள் எப்படி வாழவேண்டும்? இன்பத்தைப்போல துன்பத்தையும் பங்கு வைக்கவேண்டும். குடும்ப விளக்கு முதியவர் கூறுகிறார்!

*அன்பால் அவளும் அவனும் ஒருமித்தால்*
*துன்பம் அவளுக்கென்னில் துன்புறுவான் - துன்பம்*
*அவனுக்கெனில் அவளும் அவ்வாறே இந்தச்*
*சுவைமிகுந்து வாழவைத்தாள் தூயோர் நவையற்ற*
*காதல் வாழ்வென்று கழறினார் அக்காதல்*
*சாதல் வரைக்கும் தழைத்தோங்கும்.*

இதுவே பாரதிதாசனின் காதல் கொள்கையாகும்.

*********

# நார்மன் அரசர்கள்

*பேரறிஞர் பா. சூரியநாராயணன்*

எல்லா அரசுகளிலும் முற்காலத்தில் காணப்பட்ட அரசாங்க அமைப்பு நேரடியாக அரசரின் அதிகாரத்தில் இயங்கிய முடியாட்சி (**Monarchy**)ஆகும் . சட்டங்களை இயற்றும் அதிகாரம், அவற்றை அதிகாரி களின் வாயிலாகச் செயல்படுத்தும் அதிகாரம், குடிமக்களுக்கிடையே தோன்றும் வழக்குகளை ஆய்ந்து நீதி வழங்கும் அதிகாரம் ஆகிய மூன்று வகை அரசாங்க அதிகாரங்களை அரசரே செலுத்தி ஆட்சி செய்தார். இதே வகை அரசாகத்தான் தொடக்கத்தில் இங்கிலாந்திலும் அரசாங்கம் இருந்தது. அப்போதும் ஆங்கிலோ-சாக்சன் அரசர்கள் காலத்தில் மக்களாட்சி உணர்வுகளை உள்ளூர் ஆட்சி நிறுவனங்கள் வளர்ந்து எவளிப்படுத்தின. (இந்த ஆட்சி குறைகளைப்பற்றி முன்டி பார்த்தோம்) இங்கு இங்கிலாந்தில்புதிதாகத் தங்களுடைய அரசாங்கத்தை நிறுவிய நார்மன் வமிசத்து அரசர்கள்,எவ்வாறு தங்களுடைய கட்டுப்பாட்டு மதிகாரத்தை நடுவண அரசாங்கத்தின் மீது நேரடியாகசட செலுத்திப், பிற்காலாத்தில் அது மக்களால் நேர்ந் தெடுக்கப்பட்ட மக்களுக்குப் பொறுப்புள்ள மக்களாட்சி அரசாங்கமாக வளருதற்கு ஆவன செய்தார்களென்று பார்ப்போம். இவ்வரசர்கள் பழைய மக்களாட்சி உள்ளூர் நிறுவனங்களையும் வளர்த்துப் பாதுகாத்தனர்.

## *மக்கள் ஆட்சி*

பிரான்சு நாட்டின் நார்மண்டிமாயாணத்தின் பிரபுவான வில்லியம் 1066-இல் ஹேஸ்ட்டிங்க்ஸ் (அல்லது சென்லாக்) போர்க்களத்தில் ஆங்கிலோ சாக்சன் தலைவர்களை சின்னாட்களில் அடக்கி. நாடு முழுவதற்கு அரசராயினார். இந்த நார்மன் வெற்றி ஆங்கில அரசியலமைப்பு வரலாற்றில் மிகவும் முக்கியமான நிகழ்ச்சி ஆகும்.) எவ்வாறெனில் இந்த நிகழ்ச்சியின் விளைவாகத்தான் முந்தைய ஆங்கிலோ-சாக்சன் காலத்திலிருந்த அரசியலமைப்பு விதிகளுக்கெல்லாம் ஒரு முழுமையான வடிவத்தைக் கொடுத்தது என்று வரலாற்றாசிரியர்கள் கூறுவர். இங்கிலாந்தை ஆண்ட நார்மன் வமிசத்து அரசர்களின் பெயர்களும், அவர்களுடைய ஆட்சி ஆண்டுகளும் வருமாறு:

1. முதலாம் வில்லியம் (கி.பி. 1066-1087);
2. இரண்டாம் வில்லியம் (1087 - 1100);
3. முதலாம் ஹென்றி (1100-1135);
4. ஸ்டீபன் (1135 - 1154);
5. நார்மன் வமிசத்தின் ஒரு கிளையினரான ஆஞ்செவின் குடும்பத்தைச் சேர்ந்த இரண்டாம் ஹென்றி (1189 - 1199)
6. முதலாம் ரிச்சர்டு (1189 - 1216);
7. ஜாகர் (1199 - 1216)
8. மூன்றாம் ஹென்றி (1216 - 1272)

## நடுவண் அரசாங்கம்

முதலாம் வில்லியம் போர்க்களத்தில் திறமை பெற்றிருந்ததோடு, தம்மால் வென்று கொள்ளப்பட்ட நாட்டிலிருந்த அரசியல் நிறுவனங்களை - அதாவது விடான்சபை, உள்ளூர் ஆட்சி மன்றங்கள் முதலியவற்றைத் தமதாட்சிக்கு ஏற்றதாக உருவாக்கும் திறமையும் பெற்றிருந்தார். இவவாறு அவருடைய ஆக்கத்திறமையினால் தோற்றுவிக்கப்பட்டதே ஆங்கில அரசபதவி ஆகும். இவர் உருவாக்கிய வலுவான அரசபதவிக்கு ஆதாரமாக அமைந்தது, இவர் இங்கிலாந்தில் புகுத்திய அரசியல் நில மானிய முறை (**Political feudalism**) ஆகும்; ஆங்கிலோ சாக்சன் காலத்திலிருந்த சமூக, பொருளாதார நிலமானிய முறையில் (**Locio economic feudalism**) மக்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும் பொருட்டு நிலமில்லாதவர் நிலமுடையோரிடம் தன்னை ஒப்படைத்துக் கொள்ளும் முறையும், (**Commendation**) பிழைப்புக்காக நிலப் பிரபுக்களின் நிலங்களைப் பயிரிடும் பணியும் இருந்தன. வில்லியம் கொண்டு வந்த அரசியல் நிலமானிய முறையிலே நிலமானியம் பெறுபவர் நிலம் வழங்கபவருக்குச் சில அரசியற் பணிகளையும நிறைவேற்றுதல் வேண்டும்; அவர் தமது வழக்குகளைப் பண்ணை நீதிமன்றங்களில் (**manorial court**) தீர்த்துக் கொள்ளுதல் வேண்டும்; இதற்கு மாறாக நிலமானியப் பிரபு தன்னுடைய கீழாளை அல்லது சிறுநிலைப் பண்ணைப் பிரபுவுக்குப் (**vassal**) பாதுகாப்பு அளித்தல் வேண்டும். பண்ணைப் பிரபு தன் கீழுள்ள பண்ணையாளுக்குப் பாதுகாப்புத் தருதல் வேண்டும்; சுருங்கச் சொல்லின் அரசியல் நிலமானிய முறையில் அரசருக்கு உட்பட்ட பல சிற்றரசர்களாக பல நிலமானியப் பிரபுக்கள் இருந்தனர். இதனால் வரும் பேரிடர்ப்பாட்டை முதலாம் வில்லியம் நன்கு உணர்ந்தவரே ஆவர்.

அவர் பிரான்சின் அரசரைவிட மிகக் கூடுதலான அரசியலதிகாரம் உடையவராக நார்மண்டியின் பிரபுவாக இருந்தபோது விளங்கினார். ஆகையால் அவர் இங்கிலாந்தை வென்று அங்கு இருந்த நிலங்களைத் தமக்கு உதவி செய்த நார்மானிய பிரபுக்களுக்கு வழங்கியபோது, அவ்றறை ஒரே இடத்தில் வழங்காமல நாட்டின் பல்வேறு பகுதிகளிலும பிரித்துக் கொடுத்தார். இதனால் நிலமானியப் பிரபுக்கள் அரசருக்கெதிராக வெகுவிரைவில் நிலமானியப் படையைத் திரட்டுவது தடுக்கப்பட்டது. நிலமானிய முறையைப்பற்றி பிஷப் ஸ்ட்டப்ஸ் என்பவர் கூறும் இலக்கணமாவது

"சமுதாயத்தையும், அரசாங்கத்தையும் மானிய ஒப்பந்தத்தின் பேரில் (feudab contract) அமைப்பதுதான் நிலமானிய முறை ஆகும்; அதில் சமூகத்திலுள்ள ஒவ்வொருவரும் பணிசெய்தல் (suit and service)பாதுகாப்புப் பெறுதல் என்ற ஒப்பந்தத்தின் பேரில் மற்றவருடன் இணைக்கப்படுகிறார்; இவ்வொப்பந்தத்தின்படி நிலமானியப்பிரபு தனது கீழாளுக்குப் (vassal) பாதுகாப்பு தருதல் வேண்டும்;கீழாள் தனது நிலமானியப்பிரபுவுக்குப் போர்ப்பணி முதலியவை செய்தல் வேண்டும்"[1]

இவ்வொப்பந்தத்தின் முக்கிய நோக்கம் குடிமக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதுதான். இக்கால தேசிய அரசாங்க முறையிலே குடிமக்களுக்குப் பாதுகாப்பு என்ற பணியை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு அதன்பொருட்டுக் காவல்துறை அலுவலரை அமர்த்தியும், நீதிபதிகளை அமர்த்தியும் இயங்குகிறது; ஆனால் போக்குவரவு வசதிகளும், செய்தித் தொடர்பு வசதிகளும் இக்காலத்தில் இருப்பதைப்போல அக்காலத்தில் இல்லை; ஆகையால், நிலத்தை மானியமாக உடையவருக்கே இந்தப் பணிகள் அரசரால் கொடுக்கப்பட்டன. எவரும் நிலத்தின் உடைமையாளர் அல்லர்; அவர் சிலபணிகள் செயதற்கு எதிராக நிலத்தை மானியமாகப் பெற்றிருந்தார்.

---

1 ". Feudalism is an organization of society and government on the leasis of land tenure in which all are bound together by a contract of suit and service, contract of protection of the vassal by the lord, and the contract of service to the lord by the vassal" - Bishop stubbs/ select constitutional

நிலமானிய முறையில் அரசருடைய நிலையயைப் பின்வருமாறு கூறலாம்; நாட்டின் நிலங்களெல்லாவற்றுக்கும் அரசரே உயர்தர உரிமையாளர்; அவரிடமிருந்து நிலத்தை மானியமாகப் பெற்றோரெல்லாம் அரசருக்கு வாரிசு வரி(**Succession Duty**) வாரிசுதாரர். சிறியவயதினராயிருந்தால் அவருக்கு அரசர் பாதுகாப்பளித்தற்காகச் செலுத்தப்படும் வரி, வாரிசு பெண்ணாக இருந்தால் அவரை மணம் செய்பவர் செலுத்தவேண்டிய மணவரி,வாரிசு எவரும் இல்லாமல் வமிசவழி நின்றுவிட்டால், மானியத்தைத் திரும்பப் பெறும் உரிமை, அரசருஐடய மூத்த மகனுக்குப் பட்டம் அளிக்கப்படும் போதும், அரசரின் மூத்த மகளுக்குத் திருமணம் நடைபெறும்போதும், அரசர் போரில் சிறைப்பட்டால் அவரை விடுவித்தற்பொருட்டு மிட்சிப்பணம் செலுத்த வேண்டியவோதும், அரசருக்கு நிலமானியப் பிரபுக்கள் பொருள் கொடுத்தல் வேண்டும்.

இத்தகைய உதவிகளெல்லாம் நிலமானிய முறையிலே அரசருக்கு உரியவை ஆயினும், நடைமுறையில் இந்த அரசியல் நிலமானிய முறையிலே ஒரே ஆளாக இருந்த அரசரைவிட பலராக இருந்த நிலமானியப் பிரபுக்களெல்லாம் மிக்க படைவலிமையும், ஆட்சி அதிகாரமும் உடையவராகி அரசரை வலுவற்றவராக ஆக்கிவிடுதல் கூடுமென்று முதலாம் வில்லியம் நன்கு உணர்ந்தார்; தன்னிடமிருந்த குவிக்கப்பட்ட அதிகாரத்தைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுதற்பொருட்டு, அவர், (1) பெரிய நிலப்பண்ணைகள் எவருக்கும் வழங்கப்படாமல் பார்த்துக் கொண்டார்; இதனால் முன்பு இருந்த பெரிய பண்ணைப்பிரபு அல்லது எர்ல் (**Earl**) என்ற பதவி மறைந்தது; அகற்கு மாறாக சிறிய மானியங்கள் ஒவ்வொன்றிலும் அரசருடைய நேரடிக் கட்டுப்பாட்டில் பணியாற்றிய ஷெரீஃப் ( **Sheriff** ) என்ற அதிகாரி தோன்றினார். (2) நில மானியப் பிரபுக்கள் ஒவ்வொருவரும் தமது பண்ணை நீதிமன்றத்தில் மானியப பிரபுக்கள் ஒவ்வொருவரும்தமது பண்ணை நீதிமன்றத்தில் (**baronial court**) நீதி வழங்கும் உரிமை பெற்றிருந்தாலும், அவர்களுடைய இவ்வதிகாரத்தையும், செல்வாக்கையும் தடுக்கும் பொருட்டுப் பழைய நீதிமன்றங்களை (குடிமக்கள் பங்கெடுத்திருந்த உள்ளூர் நீதி மன்றங்களை) தொடர்ந்து இருக்குமாறு செய்தார். இதுவும் நீதி வழங்குதலில் சுதந்திரக் குடிமக்கள் பங்கெடுத்துக் கொள்ளும் மக்களாட்சி உணர்வை வளர்த்தது. (3) நடுவண் அரசாங்கத்தில் முன்பு இருந்த

விடான்சபை அல்லது விட்டனேஜ் மூட் என்ற சபை இப்போது பெரிய நிலமானியப்பிரபுக்களடங்கிய பெருமன்றம் (**The great Council or Magnum Concilium**) என்று தொடர்ந்து இருந்தது. இவ்வாறு அதனுடைய அமைப்பில்தான் மாறுதல் செய்யப்பட்டது; நிலமானியப் பிரபுக்கள் தாம் அதில் இருந்தனர்; அதற்கு அரசரைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் இல்லை. அரசர் விரும்பும்போது, கூடி, அது ஆலோசனை வழங்கிற்று. (4) அவர் 1086இல் நாட்டிலுள்ள எல்லா நிலமானியப் பிரபுக்களையும (பெரிய, சிறிய நிலமானியப் பிரபுக்களை) சாலிஸ்பரி சமவெளியில் கூடும்படி அழைத்து, அவர்கள் ஒவ்வொருவரும், மற்றவருக்கு எதிராக அரசராகப் பற்றுறுதியுடன் (விசுவாசத்துடன்) இருப்பதாகக் கூறி, உறுதிமொழி தரும்படி செய்தார். இதன் விளைவாக அரசர் பிரபு ஒவ்வொருவரோடும் நேரடியாகத் தொடர்பு கொண்டு நிலமானியமுறையோடு தேசிய அரசு முறையும் இருக்குமாறு செய்தார். இவ்வாறு அரசபதவி என்பது தேசிய ஒற்றுமையை உருவாக்கிய நிறுவனமாக ஆயிற்று, இவ் வாறு தேசிய ஒற்றுமை என்ற உணர்வு, நிலமானிய முறை தோற்றுவித்த பிரிவு சக்திகளை -ஒவ்வொரு நிலமானியப் பிரபுவிம ஒரு அரசர் என்ற இடர்ப்பாடான பிரிவு சக்திகளைத் தடுத்தது. நிலமானியப் பிரபுக்கள் தமக்குள் போர் செய்தல் இயலாது; அவர்களுடைய படைகளிருந்த போர்வீரர்கள் அரசருக்காகத்தான் போர் செய்தனர். நிலமானியப் பிரபுக்களுக்காகப் போர் செய்யவில்லை. (5) வில்லியம் கிறித்தவத் திருச்சபைக்கும் நிலங்களை மானியங்களாக வழங்கி, அதற்குச் சில உரிமைகளை-முடிசூட்டுவிழாவில், முடியை வழங்குதல், ஆலோசனை கூறும் மன்றங்களில் பங்கு கொள்ளுதல் முதலிய உரிமைகளை வழங்கினாலும், அந்தத் திருச்சபையின் தலைவராகிய போப், அரசருடைய அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதற்கு இசையவில்லை போப் ஆங்கிலத் திருச்சபைக்கு விடுக்கும் ஆணைகள் அரசருடைய ஒப்புதலைப் பெறுதல்வேண்டும், ஆங்கிலத் திருச்சபையின் மேலதிகாரிகளை அமர்த்துவதற்குப் போப் அதிகாரத்தைக் கோரியபோது, அரசர் அதற்கு இசையவில்லை. அரசருடைய குடிமக்களுள் எவரையும் போப் சமயத்துக்குப்புறம்பாக்கும் ஆணைக்குட்பணடுத்துதல் கூடாது. (6) நாட்டின் வளங்களை எல்லாம் அவர் கணக்கெடுத்துத் அதன் வாயிலாக எவர் தமக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தல் கூடுமென்றிருந்தார். இதுவே அவர் எடுத்த இறுதிநாள் கணக்கெடுப்பு (**Doomsday Survey**) எனப்படும்.

இவ்வாறு முதலாம் வில்லியம் அரசியல் வகை நிலமானிய முறையைப் புகுத்தினாலும், அவர் அதிகாரக் குவிப்புடைய, ஒரு வலுவான நடுவண் மன்னராட்சியையும் ஏற்படுத்தினார்; நாட்டின் படை அவருடைய படையாகும், நாட்டின் நிலங்களெல்லா வற்றுக்கும் அவரே உரிமையாளர்; நடுவண் அரசாங்கத்திலுள்ள அமைப்பு அவருடைய நிறுவனமாகும்; சிறிய ஏனியப் பிரபுக்களெல்லாரும் அவருடைய பணியாளர்கள். இவ்வாறு வில்லியம் ஒரு எதேச்சாதிகார அரசராக இருந்தார்; ஆயினும் நடைமுறையில் அவர் அவ்வாறு தம்மைக் காட்டிக்கொள்ளாமல், பழைய ஆங்கிலோ சாக்சன் காலத்திலிருந்த நிறுவனங்களையும தொடர்ந்து இருக்குமாறு செய்து, அதன் வாயிலாக மக்களாட்சி உணர்வும் வளர்ந்துவருமாறு செய்தார்.

முதலாம் வில்லியம் அமைத்த அதிகாரம் குவிப்பு உடைய நடுவண அரச பதவிதான் இங்கிலாந்தில் நெடுங்காலம் இருந்தது;பிற்காலத்தில் பலநிகழ்ச்சிகள் மன்னரிடமிருந்து மக்களுடைய மன்றமாகிய பாராளுமன்றத்துக்கு மாற்றின எடுத்துக்காட்டாக 1216ல் அரசர் ஜான் மக்களுடைய உரிமைகளைக் கூறும் மாபெரும் பட்டயத்தை (Magna Carta) ஒப்புக்கொண்டார்; மூன்றாம் ஹென்றியின் ஆட்சியின் 1265ல் முதல் பாராளுமன்றம் கூடிற்று 1688 ஆம் ஆண்டின் மாண்புறு புரட்சி, 1690 ன் உரிமைகள் மசோதா, 1714 ஹனோவிரியன் வம்சத்தார் ஆளத்தொடங்கியது, அரசியல் கட்சிகளின் தோற்றம், வளர்ச்சி முதலியவை எல்லாம், வல்லந்தப் புரட்சி வாயிலாக அல்லாமல், அமைதியான முறையிலே அரசாங்கத்தின் மீதிருந்த அரசருடைய கட்டுப்பாட்டு அரிகாரத்தைப் பாராளுன்றத்துக்கு மாற்றின; இவ்வாறு முதலில் உள்ளூர் ஆட்சியில் மட்டுமே அருந்த மக்களாட்சி முறை, கி. பி. 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், நடுவண அரசாங்கத்திலும் வளர்ந்தது. அரசரிடமிருந்து பாராளுமன்றத்துக்கு ஆட்சி அதிகாரம் மாறினாலும், அரசபதவி என்பது பெயரளவிலேனும் நீடித்து இருக்கிறது.

# இரு போகம்

*பேரறிஞர்* ம.ரா.போ. குருசாமி

*முன்னிதழ்த் தொடர்ச்சி......*

இதுவரை எடுத்துக்காட்டிய குறிப்புகளால ஒரு கருத்து உறுதிப்படுகிறது.

தவத்தின் ஆக்கம், தவப்பயனின் நிலைபேறு வாழ்க்கை நல்லுயர்வு - இவற்றுக்குக் காம நீக்கம் இன்றியமையாதது. காமத்துக்கு இரையாகிக் களிப்போர்க்குத் தவம் கைகூடாது; தவ முடிவில் கிட்டும் பயனும் நலிவுறும்; வாழ்க்கையில் அமைந்திருக்கும் உயர்வும் குன்றிச் சிதையும்

கோசிகன் வாழ்வினையும் இராவணன் வாழ்வினையும் கம்ப ராமயணம் கொண்டு இதுகாறும் கண்டுணர்ந்த வகையில் இவ்வுண்மை தெளிவாகிறது.

இராமாவதாரக் காப்பியத்தின் தொடக்கமுதல் இறுதிவரையில் உள்ள நிகழ்ச்சிகளையும் கருத்தமைதியினையும் கணித்துப் பார்த்தால் காமத்தின் மடைமாற்றம் ஆக்க வளர்ச்சிக்கும் காமத்தின் வெள்ளப் பெருக்கு வாழ்வாக்கத் தளர்ச்சிக்கும் வழிவகுக்கின்றன என்பது தெளிவாகும்.

ஆக, போக வாழ்க்கை பற்றிய ஓர் எச்சரிக்கைக் குறிப்பினைக் கம்பராமாயணம் வழங்குகிறது என்பது திண்ணம்.

இதமையே கம்பராமாயணத்தின் பாவிகம் எனக் கொள்வதும் பொருத்தம் எனவே தோன்றுகிறது.

## ஒரு தடை

இராம காதையில் விசுவாமித்திரர் ஒரு துணைப்பாத்திரம்; இராமவணன் எதிர்நிலைப் பாத்திரம்; மாரீசன், மாருதி போன்றவர்களும் துணைப் பாத்திர வரிசையில்தான் வருவார். எனவே, அவர்களைக் கொண்டு காப்பியத்தின் மையப்பொருளை வரையறையாக முடிவுசெய்தல் எவ்வாறு பொருந்தும்? இவ்வாறு ஒரு தடை எழுவது இயற்கை.

மேற்குறித்த பாத்திரங்கள் மட்டுமின்றி வாலி, இலக்குவன், பரதன் போன்ற பாத்திரங்களைக் கொண்டும் காம உணர்வுப் பின்னணியில் கணித்துக் காப்பியத்தை ஆராய இடம் உண்டு. என்றாலும், இராமபிரான் ஆகிய தலைமைப் பாத்திரத்தின் இயல் செயல்களைக் கொண்டு காப்பிய மையத்தை ஆய்வது இன்றியமையாதது; ஐயமே இல்லை.

இப்போது எழும் இத்தடையை நீக்குதற்கான விடைக்குறிப்பு இச் சொற்பொழிவின் தொடக்கத்திலே குறிப்பாகச் சுட்டப்பட்டுள்ளது. முதலில் சுட்டிக்காட்டியபின், தவத்துக்கு எதிராகக் காமம் செயல்படுவதைப் பிற பாத்திரங்களைக் கொண்டு விளக்கினோம்; அவ்விளக்கத்தின் முடிவிலே 'தலைமைப் பாத்திரத்தின் நிலை என்ன' என்ற சிந்தனை எழுந்துள்ளது.

தடை நீக்கமே இனி மேற்கொள்ளாது.

## இராமாவதாரக் காப்பியம்

கம்பருடைய காலம்பற்றிக் கருத்து வேறுபாடு உண்டு. எனினும், பக்தி இயக்கத்தின் முருகிய பெருநிலையும் சோழப் பெரரசின் சூழற் பின்னணியும் கம்பர் காவியத்தில் தம் தாக்கத்தைப் பதித்திருக்க வேண்டும் என்பதிலே இரு கருத்துக்கு இடம் இல்லை.

சமண, பவுத்த, அத்துவித நெறிகளாகிய அறிவு ஆதிக்கத்துக்கு எதிரணி வகுத்தது. பக்தி இயக்கம். ஆழ்வார்களும் நாயன்மார்களும் அறிவு வெட்கையால் வறண்டிருந்த தமிழ் நெஞ்சத்தில் ஈர நாகரிகம் பரப்பினார்கள்; சமயக் கழனி பசுமை கொழித்து ஈரப் பசுஞ்சொல் மலராலும் இதய உணர்வுச் கனியாலும் ஜெழித்தது. கம்ப ராமாயணத்தில் பக்தி இயக்கத்தின் செல்வாக்கைக் கணித்துப் பார்ப்பது சீரிய முயற்சி தனியாக - விரிவாக - மேற்கொள்ள வேண்டிய முயற்சி.

இந்தச் சொற்பொழிவிலே அநத முயற்சி இல்லை. சோழப் பேரரசு தன் செல்வாக்காலோ அதன் நலிவாலோ கம்பர் சிந்தனையில் எழுப்பியிருக்கக்கூடிய உணர்வுகளைக் கொண்டே இன்றைய சொற்பொழிவு அமைகின்றது.

சோழப் பேரரசின் ஓங்கிய பெருஞ்செல்வம் செழிப்பையும் கொழி(மு)ப்பையும் கண்டுணர்ந்து அனுபவிக்கும் வாய்ப்பு நம் கம்பருக்கு இருந்தது.

தமிழகத்தில், "பல்லவர்களும் பாண்டியர்களும் போரிட்டுத் தம் வலி குன்றி நின்றார்கள். பின்னர் எழுந்தது சோழப் பேரரசு.... கீழ்நிலையடைந்த தமிழகத்தின் குறை எல்லாம் இல்லாததொரு நாட்டினைத் திருநாடாகப் புனைந்துரைக்கின்றார். கம்பர்." [49]

சமண, பவுத்தத் தலைவர்களின் நெறிவிளக்கத்தால் வாழ்க்கை நிலையாமை பற்றிய எண்ணம் அளவுக்கு மீறி வற்புறுத்தப்பட்டது. இசை, நாடகக் கலைகள் காமத்தைப் பெருக்கும் என்று மக்களை நம்பவைக்கின்ற அளவுக்கு எதிர்மறையுணர்வு பெருகும் சூழ்நிலை ஏற்பட்டது. அடுத்து, அறிவு வாதத்தைத் தளரச்செய்து, எதிர்மறையுணர்வுக்கு நலிவூட்டி, இம்மை வாழ்க்கை பற்றிய உடன்பாட்டு விளைவு . "ஆழ்வார்களுக்கும் நாயன்மார்களுக்கும் தெய்வீகமும் வீரத் தலைமையும் வறண்ட வாழ்க்கை வெறுப்பாக இருக்கமுடியவில்லை." [50]

பேரரசர்களின் செல்வாக்கு ஒரு புறமும் பக்தி இயக்கத்தின் விளைவுகள் ஒரு புறமுமாகத் தமிழக வாழ்வின் உள்ளீடு பெருமாறுதலுக்கு உள்ளாகியது என்பது உண்மை.

பேரரசர்களின் செல்வாக்கு நாட்டின் எல்லை கடந்தும் தமிழர் வீரத்தை உணரச் செய்தது. பக்தி இயக்கமும் கபீர்தாசர், துளசீதாசர் போன்ற வடபுலத்து ஞானிகளின் நெஞ்சங் கவர்ந்தது.

அதே சமயத்தில், எச்சரிக்கை குறைந்த வாழ்க்கை நடத்திய செல்வர் வாழ்விலும் பொதுமக்கள் வாழ்விலும் புலன் உணர்வுகளுக்கு இரையாகும் சூழலும் இருந்ததை மறைப்பதில் பயன் இல்லை.

நிலையாமை உணர்வினை அளவு கடந்து வற்புறுத்துவதில் எதிர்மறையுணர்வு பெருகி, வாழ்க்கையைப் பொருளற்ற தாக்குவது போலவே, வாழ்க்கையின் போகங்களை நாடும்போதும் வாழ்க்கை உள்ளீடு அற்றதாய் நலிவுறும். இந்த நலிவினை - புலனடக்கம்

---

49. டாக்டர் தெ. பொ. மீ. - நாடகக் காப்பியங்கள் : பக் : 141
50. Dr. T.P.M. : A History of Tamil Literature : P. 107

போற்றாவிடின் ஏற்படக்கூடிய நலிவினை எடுத்துக்காட்டுவதைக் கம்பர் தம காவிய நோக்காகக் கொண்டிருக்கிறார்.

"படைவன்மை, தவபலம், ஒப்புவமை இல்லா வீரர்களின் தொகுதி முதலிய அனைத்திலும் இலங்கை அயோத்தியைவிட ஒரு படி முன்னேதான் நின்றது. அப்படி இருந்தும் அது அழியக் காரணம் யாது? அதன் தலைவனாய் இராவணன் தவறிழைத்தான்" அதனால் இலங்கை அழிந்தது என்று கூறுவது ஓரளவுதான் பொருந்தும்.

"ஊர் தேடு படலத்தில் அனுமன் இலங்கையின் மாட்சியை விவரிக்கின்றான்"................

*பளிக்கு மாளிகைத் தலந்தொறும்*
*இடந்தொறும் பசுந்தேன்*
*துளிக்கும் கற்பகத் தண்நறுஞ்*
*சோலைகள் தோறும்*
*அளிக்கும் தேறல் உண்டு ஆடுநர்*
*பாடுநர் ஆகிக்*
*களிக்கின் றார்அலால் கவல்கின்றார்*
*ஒருவரைக் காணேன் (430)*................

'ஐம்பொறி வாளியும் நெறியின் புறஞ் செல்லாமையின் அயோத்தி வாழ்ந்தது. ஐம்பொறிகளும் தத்தம் எல்லை மீறி ஆடத் தொடங்கின அரக்கர்கட்கு! வர பலம், படைபலம், வெற்றி எக்களிப்பு என்பவை தலைக்கேறிவிட்டன. அதன் பலனாகப் புலனடக்கத்தைக் கைவிட்டனர்' வீழ்ந்தனர்.....

'புலனடக்கத்தை மேற்கொண்ட நாட்டையும் அதனைக் கைவிட்ட நாட்டையும் கவிஞன் உள்ளங்கை நெல்லிக்கனியெனக் காட்டுகிறான். வேறு எத்துணைச் செல்வமும் வரபலமும் இருந்து என்ன பயன்? அடக்கம் இல்லாதவன் கையில் சேரும் இந்தப் பலம் அவன் அழிவுக்கே துணைபுரியும்.' [51]

இதே கருத்தினை டாக்டர் தெ. பொ. மீயும் சுட்டிக் காட்டியுள்ளார்.[52] வரைகடந்த போத்தின் கேட்டினைக் காட்ட எழுந்தது, கம்பர் காவியம்.

---

51. பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம் - கம்பன் : புதிய பார்வை பக். 238-140.

சொற்பொழிவின் தொடக்கத்தில் தசரத போகத்தையும் இராம போகத்தையும் எடுத்துக்காட்டினேன்.

தயரதன் போக மாக்கடலைத் துய்த்தே கடந்தான் ; இராகவன் நாளும் கரை தெரிவிலாத போகக் களிபபினுள் நிலைத்தான்.

இலங்கையின் போகத்துக்கும் அயோத்தியின் போகத்துக்கும் வேறுபாடு இல்லையோ? உண்டு.

வேறுபாடு இல்லை யென்றால், இலங்கையின் அழிவினை கோசலத்திலும் காட்டியிருக்க வேண்டுமே!

அயோத்தியிலும் பொருள் வளம், வரபலம், படை பலம், யாவும் இருந்தன; இன்ப நுகர்வும் இருந்தது. ஆனால், வரை கடந்ததாக புலன் இன்ப வெறி இல்லை.

அயோத்தி நகர வாழ்வு நெறி பிறழாச் சமுதாயத்துக்கு இடமாக இருந்தது என்பதற்கு நாட்டுப் படலம், நகரப்படலம் அரசியற் படலம் ஆகிய பகுதிகளிலிருந்து மிகப் பல பாடல்களை ஆதாரமாகக் காட்டலாம்; ஒன்றிரண்டு காட்டுதல் சாலும்.

*புண்ணியம் புரிந்தோர் புகுவது துறக்கம்*
*என்னும ஈது அருமறைப் பொருளே;*
*மண்ணிடை யாவர் இராகவன் அன்றி*
*மாதவம் அறத்தொடு வளர்த்தார்?*
*எண்ணருங் குணத்தின் அவன் இனிது இருந்து இவ்*
*ஏழ்உலகு ஆள்இடம் என்றால்*
*ஒண்ணுமோ இதனின் வேறு ஒரு போகம்*
*உறைவு இடம் உண்டென உரைத்தல்* [53]

புண்ணிய வினை ஆற்றினோர் அந்தமில் இன்பத்து வீடு பேறு அடைவர்; இது வேதத் துணிவு. இந்த உலகத்திலேயே இராமபிரானைத் தவிரத் தவத்தையும் அறத்தையும் வளர்த்தவர்கள் வேறு எவரேனும் உண்டா? இல்லையே. அத்தகைய நடையின் நின்றுயர் நாயகனாகிய இராமபிரான் இனிது எழுந்தருளி ஏழு

52.டாக்டர் தெ. பொ. மீ. – நாடகக் காப்பியங்கள் : பக் : 142 – 143
53.கம்ப. 97.

உலகத்தையும் அரசாள்வதற்குரிய கோநகர் அயோத்திதான். என்றால், அந்தமில் இன்பத்து அழிவு இல் வீடு போன்ற போகம் நிலைபெற்ற இடம் அயோத்தியைப் போல வேறு ஓர் இடம் (இவ்வுலகில்) உண்டெனக் கூறமுடியுமா? - இது கவிக் கூற்று.

அடுத்து ஒரு பாடல்: எவ்வுயிர்க்கும் செந்தண்மை காட்டுகின்ற அருள், தருமம் ஆகியவற்றைத் துணையாகக் கொண்டு - ஐம்புலன்களையும் அடக்கியவர்கள் பெரியோராவர். அத்தகையோர் பொங்கும் மாதவமுஂ ஞானமும் ஒருசேரப் பெற்றவர் ஆவர். தவம் என்ற தமிழ்ச் சொல் மிகுதிப்படு குறித்தது. வேண்டிய வேண்டியாங்கு எய்துவதற்கு உதவுவது தவம் என்பார் வள்ளுவர், ஞானிகளுக்கு இன்னது வேண்டும் என்ற வறட்சி எப்போதும் இல்லை. அத்தகையோருக்கும் - பொங்கு மாதவமும் ஞானமும் சேரப் பெற்றவருக்கும்கூடப் புகலிடம் ஆகின்றவன் செங்கண் மால். அந்தத் திருமாலே தான் அவதரிப்பதற்கு ஏற்ற இடம் என அயோத்தியைத் தேர்ந்தெடுத்தான். அங்கே அவதரித்து, அளவிட முடியாத காலம் செல்வச் செழிப்பில் வீற்றிருந்து அரசாண்டான். என்றால், இந்தப் பெரிய உலக்திலோ அன்றி இன்பக் களமாகிய தேவருலகத்திலோ இந்த அயோத்திக்கு நிகரான வேறு ஓர் ஊர் இருக்கமுடியுமா! இதோ கம்பர் பாடல்:

*தங்குபே ரருளும் தருமமும் துணையாத்*
*தம்பகைப் புலன்கள் ஐந்து அவிக்கும்*
*பொங்குமா தவமும் ஞானமும் புணர்ந்தோர்*
*யாவர்க்கும் புகலிடம் ஆன*
*செங்கண்மால் பிறந்து ஆண்டு, அளப்பருங் காலம்*
*திருவின்வீற் றிருந்தனன் என்றால்*
*அங்கண்மா ஞாலத்து இந்நகர் ஒக்கும்*
*பொன்நகர் அமரர்நாட்டு யாதோ*[54]

இதுவும் கவிக்கூற்றே.

ஆக, அயோத்தியின் போக வாழ்க்கை இலங்கையின் போக வாழ்க்கைபோல் இழிதகவுடைய தன்று.

தயரதன் தேவியர் அறுபதினாயிரத்து மூவரொடு போக வாழ்வு நடத்தியவன். போகக் கடலைத் துய்த்தே கடந்தான் என்கிறார் கம்பர்.

போகத்தை இரண்டு வகையாகத் திருமூலர் குறிப்பிடுவார். ஒன்று : ஆகம் (உடல்) கெடப் புல்லுதல், அடுத்தது; மோகம் கெடப் புல்லுதல்.[55] ஆகம் கெடப் புல்லுதல் போகியின் போகம்; மோகம் கெடப் புல்லுதல் யோகியின் போகம்.[56]

தயரதன் ஆகம் கெடப் போகத்தில் தோய்ந்தவன் அல்லன்.

"தசரதன் அறுபதினாயிரம் மனைவியரை மணந்தான் என்று நாம் குறை கூறிப் பயன் இல்லை. தவறு என்று அறிந்து அவன் அவ்வாறு மணந்தான் என்று யாரும் கூற முடியாது. ஒவ்வொருவரும் உலகத் துறையில் ஒவ்வொன்றினையே ஆராய்ந்து திருத்திப் புரட்சி காணமுடியும். மற்றத் துறையில் தாங்கள் வாழ்ந்த காலத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப வாழ்ந்து உயர்வார்கள். பல மனைவியர் மணம் தரசத ராஜ்யத்தில் வழக்கமாக இருந்தது."[57]

இராமனுக்கு முடிசூடுதல்பற்றி ஆய்வதற்குக் கூடிய அவையில் தயரதன் கூறுகின்ற சில கருத்துரைகள் அவனைப் பற்றி நாம் கணிப்பதற்கு உதவும் எனத் தோன்றுகிறது.

*வெள்ளநீர் உலகினில், விண்ணில், நாகரிக*
*தள்ளரும் பகையெலாம் தவிர்த்து நின்றயான்*
*கள்ளரின் கரந்துறை காமம் ஆதி ஆம்*
*உள்ளுறை பகைஞனுக்கு ஒதுங்கி வாழ்வெனோ*[58]

'மூவுலகங்களிலும் புறப்பகைகளை வென்ற யான் திருடர்போல உள்ளே மறைந்திருக்கும் அகப்பகைகளுக்கு ஒதுங்கி வாழ்வேனோ?' - காமம் முதலாகிய அகப் பகையினை வெல்லும் நினைப்பிலே தயரதன் பேசும் பேச்சு இது. *(தொடரும்...........)*

54. கம்ப. 98
55. திருமந்திரம் : ஏழாம் தந்திரம் : 257
56. இதன் விளக்கத்தை 'தமிழ் நூல்களில் குறிப்புப் பொருள்'என்னும் என் ஆய்வேட்டில் காண்க.
57. டாக்டர் தெ. பொ. மீ. - நாடகக் காப்பியங்கள் : பக் : 127 - 128

# பதிற்றுப் பத்தின் சொற்கொடை

பேரறிஞர். அ. மா. பரிமணம்

## பன்மா

பல என்னும் பொருளுணர்த்தும் 'பல்' என்னும் லகார ஈற்றுச் சொற்கு முன்னர், மெல்லின முதன் மொழி வருமாயின், லகரம் னகரமாசத் திரியும் என்பது தொல்காப்பிய விதியாகும். இவ்வகையில் பல் என்னும் லகர ஈற்றுச் சொல் தனக்கு முன் மா எனும் மெல்லின முதன் மொழி வந்தியைந்தால் 'பன்மா' என்றாகிப்' 'பல விலங்குகள்', 'பலகுதிரைகள்' எனும் பொருள் தந்து நிற்கும். இவ்வாறமைந்த 'பன்மா' என்னும் சொல்லாட்சியைப் பெருங் குன்னூர் கிழார் தாம் இளஞ்சேரல் இரும்பொறை மீது பாடிய ஒன்பதாம் பதிகப் பாடலொன்றில் 'பன்மா பரந்த புலம் ஒன் றென் றெண்ணாது' (பதி. 84.9) என்று மேற்கொண்டுள்ளார். இதற்கு உரையாசிரியர் பலரும் சிக்கலின்றிப் பல விலங்குகள், பலகுதிரைகள், பலகுதிரைகளும் யானைகளும் என்று உரை வரைந்துள்ளனர்.

'பன்மா' என்பதனை வேறுவகையில் திரிபுற்ற வடிவமாகக் கொண்டு இதே பெருங்குன்றூர் கிழார், அப்பத்தின் பிறிதொரு பாடலில், '.........பன்மா, நாடு கெடவெருக்கி நன் கலந்தரூஉ நின்' (பதி. 83. 6,7) என்று ஆண்டுள்ளார். இந்தச் சொல்லாட்சி அரியதும், பதிற்றுப் பத்தினைத் தவிர வேறெந்தச் சங்க நூல்களிலும் காண முடியாததுமாகும் இந்தச் சொல் வடிவத்தின் மூலக் கூறுகளைக் காண்பதில் சிக்கல் உள்ளமையால் உரையாசிரியர்கள் தாம் அறிந்தவாற்றல் பொருளும் இலக்கணக் குறிப்பும் வரைந்துள்ளனர்.

பதிற்றுப் பத்தின் முதற் பதிப்பாசிரியராகிய டாக்டர் உ.வே.சா அவர்கள், பன்மா என்ற பாடத்தை ஏற்றுக் கொண்டு பதிப்பித்துள்ளார்கள். பதிற்றுப் பத்தின் பழைய உரையாளர் 'பன்மா என்பது பலபடியென்றவாறு' என்று குறிப்புரை வரைந்துள்ளார். அதற்கு அடிக்குறிப்பெழுதிய உ.வே.சா அவர்கள் 'பன்மாறு என்பதன் விகாரம் போலும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

பதிற்றுப்பத்திற்கு விளக்கவுரை வரைந்த, ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்கள், உ.வே.சா. பாடபேதமாகக் காட்டிய 'பன்மா ரைடு' என்னும் தொடரைப் பாடமாகக்கொண்டு, தெளிவு கருதிப் பிரித்துப் பன்மான் நாடு என்று அச்சிட்டுப் பலவாகிய மாடசிமையற்ற

நாடுகள் என்று விளக்கியுள்ளார். அவர் அடிக்குறிப்பில் 'பன்மா என்றும் பாடவேறு பாடுண்டு' என்று காட்டியுள்ளார். ஒரு பதிப்பாளர் காட்டியுள்ள பாடபேதங்களுள் ஒன்றினைத் தேர்ந்து பாடமாகக் கொண்டு அவர் பாடமாகக் கொண்டதனைப் பாடபேதமாகக் காட்டிப் பதிப்பிக்கும் பழக்கம், ஏடு கண் பார்த்துப் பதிப்பிக்கும் வழக்கம் குறைந்த பின்னர்ப் பதிப்பாளர் சிலரிடம் குடி கொண்டது, அரிதாகத்தம் குறிப்புரையில் பாடபேதம் காட்டும் பழைய உரையாசிரியர் 'பன்மா ரைடு' என்று காட்டாமையால், அப்பாடபேதம் அவர் காலத்திற்குப் பின்னர்த் தோன்றியதாகலாம்.

பன்மா என்னும் சொல்லின் மூல வடிவம் எதுவாயினும், அஃமமைந்த இலக்கணக் குறிப்பு எதுவாயினும் அது அரிய சொல்லாக அமைந்து விளங்குவதும், அச்சொல்லாட்சியின் பதிற்றுப்பத்து கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கன அதே சமயம், அச்சொல், 'பல விலங்கு' எனப் பொருள் பருமாற்றையும் அந்நூலில், அதே ஆசிரியரால் ஆளப்பட்டுள்ளதையும காணமுடிகிறது. இவ்வாறு சொற்கள் அரிதாய் மாறு பட்டுத்திரிந்த வடிவங்களைப் பதிற்றுப் பத்து கொண்டிருப்பதால் அந்நூலினைப் பயில்வது கடினம் என்று முன்பெல்லாம் கருதப்பட்டது.

## அயிரை

அயிரை என்னும் பெயர்ச் சொல், அப்பெயரிலமைந்த ஒருவகை மீனையும், மலையினையும் குறிக்கும் வகையில் சங்க நூல்களில் இடம் பெற்றுள்ளது. அயிரைமீன், அயிலை மீன் என்னும் பெயரிலும் வழங்கப்பட்டுள்ளதனை, 'அயிலைதுழந்த அம்புளிச் சொரிந்து' (சுகம். 60,4) என்றும் அக நானூற்று அடியாலும், அயிரைதுழந்த என்றும் அதன் பாடவேறு பாட்டாலும் அறியலாம்.

எட்டுத் தொகை நூல்களுள் நற்றிணை (272. 5) குறுந்தொகை (128. 3, 166-2, 78-1), ஐங்குறு நூறு (164-2), புற நானூறு (67 - 6) ஆகியவற்றுள் அயிரை என்னும் சொல் மீனைக் கறிக்கும் வகையிலேயே இடம் பெற்றுள்ளது. அவ்விடங்களை நோக்குங்கால், அயிரை மீன்கள் தெளிந்த கடற்கழிகளில் சேறுமிக்க பகுதிகளில் இருந்தமையும் சேரர்க்குரிய தொண்டிக் கடல்துறையில் வசித்தமையும், கடற்கழியில் உள்ள அயிரை மீன்கரியைச் சிறு வெண் கடற்காக்கைகள் உண்ணும் என்பதமையும், மீன்கள் குமரியம் பெருந்துறையில் வாழ்வன என்பதனையும் உணரலாம். பதிற்றுப் பத்து, ஓரிடத்தில் மட்டும் மீன் என்னும் பொருளில் அயிரை என்னும் சொல்லினை ஆண்டுள்ளது. நெல்விளையும் வயல்களில்

இருந்த அயிரை மீன்களை உண்ணப்பாவிய மரங்களில் கூடியிருந்தன என்னும் கருத்தில்,

'முடந்தை நெல்லின் விளைவயற் பரந்த
தடந்தாள் நாரை இரிய அயிரைக்
கொழு மீன் ஆர்கைய மரந்தொறும் குழாஅலின்' (பதி.29. 3-6).

என்ற பாலைக் கௌதமனார் குறிப்பிட்டுள்ளார். இந்த இடத்தைத் தவிரப் பிறவிடங்களிலெல்லாம் (பதி. 21. 29, பதி. III-8 பதிற். 70-26, 79-18, 88-12, 90-19) அயிரை என்னும் சொல், மலை என்னும் பொருளிலும், அதன் அடிப்படையில் அதில் உரையும் கொற்றவைத் தெய்வம் என்னும் பொருளிலும் மட்டுமே ஆளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அயிரை என்னும் மலை சேராவிட்டளசத்திலுள்ளது என்பதால், முற்றிலும் சேர இலக்கியமாக அமைந்த பதிற்றுப்பத்தில் அச்சொல், அந்நாட்டு மலையினைக் குறிப்பதாக அமைந்திருப்பது சாலப் பொருத்த முடையதாகும்.

'அயிரை' என்னும் சொற்கு மலை என்று பொருள் கூறும் சென்னைப் பல்கலைப் பேரகராதி, 'சேரநாட்டுள்ளதொரு மலை' எனப் பொருள் கூறி, அது இன்றைநூல் பழனிக்கு மேற்கில் என்பது கல தொலைவில் 'ஐவர் மலை' என்னும் பெயரில் உள்ளதென (Name of a gill in the Cere country, a miler west of Palani, called Ainar-malai)

... அயிரை சேர ...க்குரிய

ஏற்றுக் கொள்ளாது என்பதமையும், கண்டார் அஞ்சும் தோற்றமுடையது என்பதனையும் குறிப்பிட்டுள்ளார்.

அயிரை மலையில் கொற்றவை உறைவதனால், சோவேந்தர் அதனைத் தன் குல தெய்வமாகப் போற்றி வந்துள்ளனர். தும்பை நிலை தொடங்கு முன்னரும், வாகை நிலைக்குப் பின்னரும் அவர்கள் அயிரை மலையினை (கண்டுறையும் கொற்றவைத்தெய்வத்தை) வழிபடுவதனை மாபாசக் கொண்டுள்ளதனை, மூன்றாம் பதிகம், 'அயிரைபலைஇ' என்று கூறுகின்றது. இனஞ்சேரல் இரும் பொறையைப் பாடிய பெருங்குன்னூர் கிழார், அம்மன்னன் அயிரை மலையுறை கொற்றவையைப் பாவிய பாங்கினைக்

**'குருதிவிதிர்த்த குவவுச் சோற்றுக் குன்நேடு**

**உருகெழு மாபின் அயிரை பரைஇ'** என்றும் (பதி. 88. 11,12)

'உருகெழு மாபின் அயிரை பாவியும்' என்றும் (பதி. 90.19) குறிப்பிட்டுள்ளார்.

இவற்றுள் அயிரை எனும் சொல் மீனையும் மலையையும், பின்னர் அம்மலையில் உறையும் கொற்றவைத்தெய்வத்தையும் குறிக்கும் வகையில் பதிற்றுப்பத்திதல் இணப்பட்டுள்ளளது. சேரமாபினர்க்குரிய அயிரைமலையினையும், அதில் உறையும் கொற்றவைத்தெய்வத்தையும் அவற்றின் இயல்புகளையும் சுட்டிய பேணிய பெருமை சங்க நூால்களுள் பதிற்றுப் [illegible]

# உன்னத உடல் நலம் தரும்
# உயர்வான வாழ்வு தரும்

## உடல் நலப் பரிசோதனைத் திட்டங்கள்

- எக்ஸிகியூட்டிவ் முழு உடல் நலப் பரிசோதனை
- முழு உடல் நலப் பரிசோதனை
- முதியவர்களுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- குழந்தைகளுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- திருமணத்திற்கு முன் பரிசோதனை
- முழு இருதய பரிசோதனை
- முழு நீரிழிவுப் பரிசோதனை
- புற்று நோய்ப் பரிசோதனை
- மதுப் பழக்கமுள்ள நோயாளிகளுக்கான முழு சோதனை
- ஆண்களுக்கான பாலியல் குறைபாடுகள் குறித்த சோதனை
- வெளிநாடு செல்லும் பயணிகளுக்கான பரிசோதனை
- பொது உடல் நலப் பரிசோதனை
- வேலைக்குத் தகுதி பெற மருத்துவப் பரிசோதனை

காலை 8.00 மணி முதல் 9.00 மணிக்குள்
நீங்கள் விரும்பிய நாளில் (ஞாயிறு உட்பட)
வெறும் வயிற்றில் மல சாம்பிளோடு நேரில் வரவும்

உங்கள் நோய் பற்றிய பிரச்சனைகளுக்கு தொலைபேசியின் மூலம் இலவச ஆலோசனை வழங்கப்படும். திங்கள் முதல் வெள்ளி வரை நேரம் மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரை

**மாஸ்டர் ஹெல்த் செக்-அப் டிபார்ட்மெண்ட்**

## மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்

லேக் ஏரியா மேலூர் ரோடு, மதுரை - 625 107. போன் : 588741-56
Fax : 536535 E-mail:mmhrc@md2.vsnl.net.in


*ஜோ ஆப்செட், மதுரை-1.* ☎ 743063